## ரூ.10 முதல் ரூ.20 வரை குறைகிறது

# சென்னையில் மெட்ரோ ரெயில் கட்டணம் குறைப்பு

## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, பிப்.21-
சென்னையில் மெட்ரோ ரெயில் கட்டணம் ரூ.10 முதல் ரூ.20 வரை குறைக்கப்படுவதாக முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

### மெட்ரோ ரெயில் திட்டம்

மறைந்த முன்னாள் முதல்-அமைச்சர் ஜெயலலிதா, சென்னை மாநகரத்தை உலகத்தரத்திற்கு மேம்படுத்த, பல்வேறு சிறப்பான உட்கட்டமைப்பு திட்டங்களை வகுத்து செயல்படுத்தினார். பெருநகர சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காகவும், மக்களின் பயண நேரத்தை குறைப்பதுடன், பயணம் எளிமையாகவும், வசதியாகவும் அமைய, அவர் தொலைநோக்கு பார்வையோடு, மெட்ரோ ரெயில் திட்டத்தை செயல்படுத்துவதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்தார்.

அ.தி.மு.க. அரசும், சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தை மிகுந்த முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. அதன் விளைவாகத்தான், இன்று இத்திட்டத்தின் கட்டம்-1 முழுமையாக முடிக்கப்பட்டு, பல்வேறு வழித்தடப் பகுதிகளில் 54.15 கி.மீ. நீளத்திற்கு பயணிகள் சேவை சிறப்பாக நடைபெற்று வருகிறது. 118.90 கி.மீ. நீளத்திலான சென்னை மெட்ரோ ரெயில் கட்டம்-2-க்கும் அடிக்கல் நாட்டப்பட்டு உள்ளது. 29-6-2015-ல் இருந்து சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், பயணிகள் சேவையை தொடங்கியது.

### 7.25 கோடி பயணிகள் பயணம்

5 ஆண்டுகள் மெட்ரோ ரெயில் சேவையை வெற்றிகரமாக முடித்து, 6-ம் ஆண்டில் தனது சேவையை தொடர்கிறது. இதுவரை 7.25 கோடி பயணிகள் மெட்ரோ ரெயில் சேவைகளை பயன்படுத்தி உள்ளனர். மெட்ரோ ரெயில் சேவையை பெருவாரியான பொதுமக்கள் பயன்படுத்தும் வண்ணம், அதன் கட்டணம் குறைக்கப்பட வேண்டும் என்று பொதுமக்களிடம் பெறப்பட்ட கோரிக்கைகளை ஏற்று சென்னை மெட்ரோ ரெயில் கட்டணம் குறைக்கப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதன்படி, தற்போது 0 முதல் 2 கி.மீ. வரை வசூலிக்கப்படும் ரூ.10 கட்டணம் உத்தரவுக்கு பிறகும் மாற்றமில்லாமல் தொடர்கிறது. தற்போது, 2 முதல் 4 கி.மீ. வரை வசூலிக்கப்படும் ரூ.20 கட்டணம், உத்தரவுக்கு பிறகு 2 முதல் 5 கி.மீ. வரை என மாற்றியமைக்கப்படுகிறது.

### கட்டணம் குறைப்பு

தற்போது, 4 முதல் 6 கி.மீ. வரை வசூலிக்கப்படும் ரூ.30 கட்டணமும், 6 முதல் 12 கி.மீ. வரை வசூலிக்கப்படும் ரூ.40 கட்டணமும், உத்தரவுக்கு பிறகு 5 முதல் 12 கி.மீ. வரை ரூ.30 என மாற்றி அமைக்கப்படுகிறது. இதேபோல், 12 முதல் 18 கி.மீ. வரை வசூலிக்கப்படும் ரூ.50 கட்டணம், உத்தரவுக்கு பிறகு 12 முதல் 21 கி.மீ. வரை ரூ.40 என குறைக்கப்படுகிறது.

மேலும், 18 முதல் 24 கி.மீ. வரை வசூலிக்கப்படும் ரூ.60 கட்டணமும், 24 கி.மீ. மேல் வசூலிக்கப்படும் ரூ.70 கட்டணமும், உத்தரவுக்கு பிறகு 21 முதல் 32 கி.மீ. வரை ரூ.50 என குறைக்கப்படுகிறது.

### 20 சதவீதம் தள்ளுபடி

கியூ.ஆர். கோடு மற்றும் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் தொடுதல் இல்லா மதிப்பு கூட்டு பயண அட்டை மூலம் பயணிப்பவர்களுக்கு மேலும் கூடுதலாக அனைத்து பயணச்சீட்டுகளுக்கும் அடிப்படை கட்டணத்தில் இருந்து 20 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படும்.

ஒரு நாள் வரையறுக்கப்படாத மெட்ரோ ரெயில் பயணத்திற்கு, தற்போதுள்ள கட்டம்- 1-ன் 45 கி.மீ. வழித்தடப் பகுதிகளுக்கான கட்டணம் ரூ.100 ஆகும். தற்போது தொடங்கப்பட்டுள்ள வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரையிலான 9 கி.மீ. நீள கூடுதல் வழித்தடத்திற்கும் சேர்த்து மொத்தம் 54 கி.மீ. வழித்தடத்திற்கும் அதே ரூ.100 கட்டணமாக இருக்கும்.

### 50 சதவீத தள்ளுபடி

ஒரு மாத வரையறுக்கப்படாத மெட்ரோ ரெயில் பயணத்திற்கு, தற்போதுள்ள கட்டம்-1-ன் 45 கி.மீ. வழித்தடப் பகுதிகளுக்கான கட்டணம் ரூ.2,500 ஆகும். தற்போது தொடங்கப்பட்டுள்ள வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரையிலான 9 கி.மீ. நீள கூடுதல் வழித்தடத்திற்கும் சேர்த்து மொத்தம் 54 கி.மீ. வழித்தடத்திற்கும் அதே ரூ.2,500 கட்டணம்தான்.

ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொது விடுமுறை நாட்களில் கட்டணத்தில் இருந்து 50 சதவீத தள்ளுபடி. (வரையறுக்கப்படாத பயண அனுமதி சீட்டுகள் மற்றும் வரையறுக்கப்பட்ட நாட்களில் செல்லுபடியாகும் அனுமதி சீட்டுகள் நீங்கலாக)

### பொதுமக்கள் பயன்படுத்த வேண்டும்

இந்த ஆணை நாளை (திங்கட்கிழமை) முதல் அமலுக்கு வருகிறது. பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று நடைமுறைபடுத்தப்பட உள்ள இந்த கட்டண குறைப்பை பயன்படுத்தி, பொதுமக்கள் தங்களது பயணங்களை குறைந்த செலவில், நிறைவாக மேற்கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.